**நுவரெலியா பிரதேச சபை - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நுவரெலியா பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுவரெலியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6.1(அ) பந்தியின் அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்தப்பட வேண்டிய தொலைபேசிக் கட்டணம் ரூபா 22,000 சரியாக கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், உரிய செலவின தலைப்பிற்கு ரூபா 97,000 என ரூபா 75,000 கூடுதலாக வரவு வைக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திருத்திய பரீட்சை மீதியின் பிரகாரம் ஆரம்ப மீதி சீராக்கம் இடம்பெறாதிருந்ததாக அறிய தருகிறேன். | அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்ய வேண்டும். |
| (ஆ) | 20 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவு மூலம் வருடத்தின் களஞ்சியசாலை பண்டங்கள் வழங்கியமை ரூபா 1,066,694 வழங்கல் மற்றும் உபகரணங்கள் (103) செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு உரிய இருப்புக் கணக்கிற்கு செலவிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டு | தவறுதலாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திருத்திய பரீட்சை மீதியின் பிரகாரம் ஆரம்ப மீதி சீராக்கம் இடம்பெறாதிருந்ததாக அறிய தருகிறேன். | அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்த போதிலும் செலவு கணக்கிற்கு ரூபா 409,858 மாத்திரம் வரவு வைக்கப்பட்டு உரிய இருப்புக் கணக்கு ரூபா 1,066,694 ஆல் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் ஆண்டின் செலவினம் ரூபா 656,836 குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன் கணக்கு சமப்படுத்தப்பட்ட முறையில் தெளிவின்மை காணப்பட்டது. | | |
| (இ) | வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட முத்திரை வரி மற்றும் ரூபா 188,469 மற்றும் தேசத்தை கட்டியெழுப்புலுக்கான வரி ரூபா 120,454 தொகை வேறு வருமானத்தின் கீழ் வருமான செலவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திருத்திய பரீட்சை மீதியின் பிரகாரம் ஆரம்ப மீதி சீராக்கம் இடம்பெறாதிருந்ததாக அறிய தருகிறேன். | அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்ய வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டின் 32 ஆம் இலக்க நாட்குறிப்பின் பிரகாரம் ஆண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திர கட்டண வருமானம் ரூபா 4,701,936 ஆக இருந்ததுடன் 02 ஆம் இலக்க நாட்குறிப்பின் பிரகாரம் ஆண்டில் அறவீடு ரூபா 4,566,736 ஆக இருந்தமையால் ஆண்டின் இறுதியில் ரூபா 135,200 நிலுவையாக காணப்பட்ட போதும் அந்நிலுவை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திருத்திய பரீட்சை மீதியின் பிரகாரம் ஆரம்ப மீதி சீராக்கம் இடம்பெறாதிருந்ததாக அறிய தருகிறேன். | அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் அண்மித்த அட்டவணைகள் / அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 4,849,263 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது | திருத்திய பரீட்சை மீதியொன்று ஊடாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | இணக்கமின்மை இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு தேவையான சீராக்கம் செய்ய வேண்டும் |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 5 கணக்கு விடயங்களுக்குரிய் ரூபா 118,701,720 கூட்டுத்தொகையான 05 கணக்கு மீதிகள் உறுதிகள், | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை தவறுதலாக இடம் | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட |

| | | |
|---|---|---|
| திட்டப்படம் மற்றும் மீதி அட்டவணைகள் இல்லாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியவில்லை. | பெற்றதாகும். | வேண்டும் |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| உள்ளராட்சிமன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | புறநகர் கட்டிடத்தின் புதிய கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீடொன்று எடுக்காமல் வருமான பரிசோதகரிடமிருந்து பெற்றுக்கொண்ட புதிய கடைக்கு மாதாந்தம் ரூபா 60,000 முதல் ரூபா (300,000) வரையான வீச்சில் வரும் வகையில் 05 கடைகளுக்கு குறைந்த மதிப்பீட்டில் பிரதேசத்தில் குடியிருப்போரிடமிருந்து மட்டுப்படுத்தப்பட்ட பெறுகை கோரலொன்று மேற் கொள்ளப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்வதில் தாமதம் இடம்பெற்றதால் சபையின் வருமான உத்தியோகத்தர் மூலம் தற்காலிக தற்காலிக மதிப்பீடொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு பெறுகை கோரல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,919,490 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,804,200 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி வளைவுகளில் வீழ்ச்சி ரூபா 9,723,689 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரி அறவிடும் போது ரூபா 1,523,823 தொகை 2020 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்தது. 2020 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 2,184,265 ஆக இருந்ததுடன் ரூபா 1,744,624 ஆன நிலுவையாக இருந்து. ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 1,071,482 மற்றும் ஆண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 1,514,674 ஆன நீர்க் கட்டணங்களில் ரூபா 1,433,112 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ஆதலால் ஆண்டின் இறுதியில் நிலுவை ரூபா 1,153,044 ஆக அதிகரித்திருந்தது. | நாட்டில் காணப்பட்ட தொற்று நிலைமையின் பேரில் சபை மூலம் தற்காலிக நடவடிக்கை எடுத்திருந்ததுடன் குத்தகை கொடுப்பனவிற்காக சலுகை காலமொன்று வழற்குவதற்கு நடவடிக்கை எடுத்தமையால் ஏற்பட்ட ஒன்றாகும். | நிலுவை வாடகை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நானுஓயா புறநெகும கட்டிடத்தின் கடைகளுக்காக பெறுகை கோரல் 2021 சனவரி 29 முதல் பெப்ரவரி 12 வரை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் இரண்டு பேரிடமிருந்து 2020 திசெம்பர் 17 ஆந் திகதி ரூபா 1,500,000 தொகை மற்றும் 2020 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 806,400 தொகை சபைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட 2021 சனவரி 11 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டு கடைகளின் உரித்து கையளிக்கப்பட்டிருந்தது. | 2020 திசெம்பரர் 03 ஆந் திகதி பொது சபை தீர்மானம் 05.01.03 இன் பிரகாரம் சபையால் முன்மொழியப்பட்டு பெயரிடப்பட்ட ஐந்து பேருக்காக புறநெகும் கட்டிடத்தில் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. | திறந்த பெறுகை கோரி வெளிப்படையாக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 மற்றும் 2017 மார்ச் 15 ஆந் திகதிய 33 மேலதிகத்தின் பிரகாரம் போட்டி விண்ணப்ப அளவுகள் கிடைக்காத சந்தர்ப்பமொன்றில் கேள்வி இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் பெறுகை கோருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் புறநெகும கடைகடைகளை குத்தகைக்கு வழங்கும் போது 05 கடைகளுக்காக ஒரு கடைக்காக ஒரு கேள்வி மாத்திரம் முன்வைக்கப்பட்டிருக்கையில் எவ்வித ஒப்பீடொன்ற இல்லாமல் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு 2021 பெப்ரவரி 12 ஆந் திகதி கேள்விச் சபையால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அக்குறைபாடுகளை தவிர்ப்பதற்கும் செயற்படுவதாகவும் பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் கூறுவிலை விசாரணை மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.3 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **ஸ்ரீ சமன்கம நீர் மூலாதாரத்தின் பாதுகாப்பு வேலி நிர்மாணம்** | | |
| மதிப்பீடு மற்றும் பட்டியலின் பிரகாரம் வேலியின் உயரம் 2.25 m ஆக இருந்த போதிலும் வேலியின் உயரம் 1.8 m ஆக இருந்தது. வேலித் தூணிற்காக 6mm கம்பி 4 இனைப் பயன்படுத்தி மேல் ஓரத்தில் 100x100mm மற்றும் கீழ் ஓரத்தில் 150x150 mm ஆன கொங்கிரீட் தூண் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்காக மேல் ஓரத்தில் 75x75mm மற்றும் கீழ் ஓரத்தில் 120x120 mm ஆன கொங்கிரீட் தூண்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. நிர்மாண வேலை எதுவும் மதிப்பீட்டின் பிரகாரம் நிறைவேற்றப்படாதிருக்கையில் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரையுடனும் சபை செயலாளரின் அங்கீகாரத்துடன் ரூபா 200,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | விசாரணையில் சுட்டிக்காண்பித்த குறைபாட்டினை மீண்டும் செய்து தருமாறு ஒப்பந்தக்கார கிராமிய சங்கத்திற்கு அறவிக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டின் பிரகாரம் நிர்மாணவேலை நிறைவேற்றப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### சுற்றாடல் சிக்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கந்தபொல ஆயுர்வேத நிலையம் அமைந்துள்ள கட்டிடத்தினை அண்மித்தாக நடாத்திச் செல்லப்படும் விவசாய இரசாயன பொருட்கள் விற்பனை நிலையத்தில் விற்பனை செய்வதற்காக அவ்வப்போது சேகரிக்கும் கால்நடை உரங்களினால் சுற்றுபுறத்தில் அதிகளவில் துர்நாற்றம் வீசுவதாக அறிக்கையிடப்பட்டிருந்தது, ஆயுர்வேத நிலையத்திற்கு வருகை தரும் நோயாளிகளுக்கும் ஆயுர்வேத மருந்துகளுக்கும் பிரதேசத்தின் சுற்றியுள்ள மக்களுக்கு சுகாதாரம் சார்ந்த அச்சுறுத்தல் காணப்படும் முறையற்ற கால்நடை உரம் சேகரித்தல் தொடர்பாக சபைக்கு அவ்வப்போது தெரியப்படுத்தப் பட்டிருந்த போதும் சபை எவ்வித ஈடுபாட்டையும் காண்பிக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் வியாபார நிலையத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை ஏடப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி சிக்கல்களுக்கு உரிய தீர்வுகளை வழங்க வேண்டும். |
| (ஆ) | திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக சபையினால் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இதுவரை காணியில் எவ்வித செயற்திட்டமொன்றை செயற்படுத்தியிருக்கவில்லை. இது தொடர்பாக சபையினால் விடய அல்லது விடயப்பொறுப்பு உத்தியோகத்தர் இல்லாமல் இருந்ததுடன் சபைக்கு சேரும் கழிவுப்பொருட்கள் வேறொரு உள்ளுராட்சிமன்றத்திற்கு வெளியேற்றுவது இடம்பெற்றிருந்தது. | திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக காணியொன்றை கையேற்பதற்கு பிரதேச செயலகத்திற்கு பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் இதுவரை குறித்த காணியை சபைக்கு கையளிப்பொன்று இடம்பெறவில்லை யென்பதால் எதிர்வரும் நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான திட்டமொன்றின் பிரகாரம் செயற்பட வேண்டும். |